**<u>IN THE COURT OF THE DISTRICT MUNSIF,</u>**
**<u>Present: Miss.D.V.Koperundevi, B.Com., LLB., (Hons),</u>**
**<u>District Munsif, Arni.</u>**
**<u>O.S.210/2013</u>**

2026—ம் ஆண்டு மார்ச் மாதம் 17ம் நாள் செவ்வாய்கிழமை பிரதிவாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச்சட்டம் 1969, பிரிவு 3—ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

**D.W.1 மீனாட்சிசுந்தரம் வயது 71, த/பெ வெங்கடேசன்**

**நேரம் -12.55**

**<u>குறுக்கு விசாரணை</u>**

**மனு அனுமதிக்கப்பட்டு D.W.1 மீண்டும் சாட்சியம் அளிக்கப்படுகிறது.**

வழக்கு சொத்தானது முள்ளிப்பட்டு ஊராட்சிக்குட்பட்டது என்றால் சரிதான். முள்ளிப்பட்டு ஊராட்சி என்பது ஆரணி மேற்கு வட்டார வளர்ச்சி அலுவலகத்திற்கு உட்பட்டது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.22 ஆவணமான வரைபடத்தை யாரிடமிருந்து பெற்று தாக்கல் செய்தேன் என்றால் 3ம் பிரதிவாதி ராஜேந்திரன் என்பவரிடமிருந்து பெற்றேன். இதற்கு முன்பு மேற்படி வரைபடம் என் வசம் இருந்ததா என்றால் அசல் வரைபடம் இல்லை, நகல்தான் என்னிடம் இருந்தது, அதன் பின்னிட்டு 3ம் பிரதிவாதி தற்போது மேற்படி அசல் ஆவணத்தை தேடி என்னிடம் ஒப்படைத்தார். மேற்படி வரைபடத்திற்கு அங்கீகாரம் பெற யார் மனு கொடுத்தார் என்றால் 1ம் பிரதிவாதி ராமலிங்கம் என்பவர் மனு செய்தார்.

2. மேற்படி வரைபடத்தில் ராமலிங்கம் என்பவர் மனு செய்ததன் பேரில் அங்கீகாரம் வழங்கப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் கிரையம் பெற்ற போதே மேற்படி மனை பிரிவுகள் அங்கீகாரம் பெற்றுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் தாக்கல் செய்துள்ள பதிலுரையில் மேற்படி விவரங்களான 14.09.2011 அன்று முள்ளிப்பட்டு ஊராட்சி மன்ற தலைவர் வழங்கிய அங்கீகாரம் வழங்கியது பற்றி குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் என்னுடைய பதிலுரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் மேற்படி விவரங்களை சொல்லவில்லை என்றால் சரிதான்.

3. ஆனால் நான் கிரையம் பெற்ற சமயத்தில் மேற்படி வரைபடத்தின் நகலை என்னிடம் ஒப்படைத்தார்கள் என்றால் சரிதான். அதேப்போல் நான் கிரையம் பெறுவதற்கு முன்பே 14.09.2011 அன்று முள்ளிப்பட்டு ஊராட்சி மன்ற தலைவர் அங்கீகாரம் வழங்கியது பற்றி எனக்கு தெரியும் என்றால் சரிதான். வா.சா.ஆ.11 தான செட்டில்மெண்ட் ஆவணத்தை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்துள்ளேன். மேற்படி தான செட்டில்மெண்டில் 14.09.2011 அன்று முள்ளிப்பட்டு ஊராட்சி மன்ற தலைவரால் மனைப் பிரிவுகளுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது என்ற விவரம் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் சாட்சி ஆவணத்தை பார்த்து விட்டு இல்லை என்று கூறினார்.

4. மேற்படி வா.சா.ஆ.11 தான செட்டில்மெண்டில் ஆவணமானது 14.09.2011ற்கு பின்னிட்டு ஏற்பட்ட ஆவணம் என்றால் சரிதான். உண்மையிலேயே அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தால் மேற்படி வா.சா.ஆ.11ல் அங்கீகாரம் பெற்ற விவரங்கள் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் சரிதான். ஆகையால் மேற்படி 14.09.2011 தேதியில் அங்கீகாரம் வழங்கப்படவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.7ல் கிரையம் பெற்ற ஆவணத்திலும், மேற்படி விவரங்களை பற்றி குறிப்பிட்டு கிரையம் வாங்கவில்லை என்றால் சரிதான், ஆவணங்களில் உள்ளவாறு கிரையம் பெற்றேன். எனக்கு முன்னரே அங்கீகாரம் பெற்ற நகலை கொடுத்ததால் மேற்படி பி.வா.சா.ஆ.7ல் கிரைய பத்திரத்தில் அங்கீகாரம் பெற்ற விவரத்தை குறிப்பிட்டு நான் கிரையம் பெற்றிருப்பேன் என்றால் குறிப்பிடவில்லை.

5. ஆகையால், நான் கிரையம் பெற்ற காலத்தில் மனைப்பிரிவுகள் அங்கீகாரம் பெறவில்லை என்றால் சரியல்ல. ஏற்கனவே வா.சா.ஆ.17 ஆவணத்தை துணை வட்டார வளர்ச்சி அலுவலர் வாதிக்கு ஒரு கடிதத்தை வழங்கினார் என்றாலும், அந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த சமயத்தில் முள்ளிப்பட்டு ஊராட்சி செயலாளர் கட்டுப்பாட்டில் இருந்தது என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.17 ல் 2 சர்வே எண்கள் 129/3ஏ மற்றும் 129/3பி உள்ள மனைப்பிரிவுகளுக்கு அங்கீகாரம் வழங்கப்படவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் சாட்சி ஆவணத்தை பார்த்து விட்டு குறிப்பிட்டுள்ளது என்று கூறினார்.

6. வா.சா.ஆ.18ல் 2 சர்வே எண்கள் 129/3ஏ மற்றும் 129/3பி உள்ள மனைப்பிரிவுகளுக்கு அங்கீகாரம் வழங்கப்படவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் சாட்சி ஆவணத்தை பார்த்து விட்டு குறிப்பிடப்பட்டுள்ளது என்று கூறினார். மேற்படி வா.சா.ஆ.17 மற்றும் வா.சா.ஆ.18 ஆகியவை 2017ம் வருடத்தில் வழங்கப்பட்டது என்றால் சரிதான். உண்மையில் 2011ம் வருடம் மனைப்பிரிவுகளுக்கு அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது என்றிருந்தால் 2017ம் ஆண்டு மேற்படி வா.சா.ஆ.17 மற்றும் வா.சா.ஆ.18 ல் குறிப்பிட்டு சொல்லியிருப்பார்கள் என்றால் சரியல்ல. மேற்படி பி.வா.சா.ஆ.22 ஆவணத்தில் குறிப்பிட்ட தேதியில் போடப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் அங்கீகாரம் வழங்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

7. கிராமத்தில் மனைப்பிரிவுகளுக்கு அங்கீகாரம் பெற வேண்டும் என்றால் ஊராட்சி மன்ற செயலாளரிடம் மனு கொடுத்து அவர்தான் மனுவை ஊராட்சி மன்ற தலைவருக்கு அனுப்புவார் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. அதன் பேரில் ஊராட்சி மன்ற கூட்டம் நடைபெறும் என்றால் சரிதான். அந்த கூட்டத்தில் ஊராட்சி மன்ற தலைவர், செயலாளர், வார்டு உறுப்பினர்கள் அனைவரும் கலந்து பேசி தீர்மானம் இயற்றுவார்கள் என்றால் சரிதான். மேற்படி தீர்மானத்தின் அடிப்படையில்தான் தலைவர் மனைப்பிரிவுகளுக்கு அங்கீகாரம் கொடுப்பார் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.22 ஆவணத்தில் மேற்படி ஊராட்சி மன்றத்தின் தீர்மான நகலை இணைக்கவில்லை என்றால் சரிதான்.

8. மேற்படி பி.வா.சா.ஆ.22 ஆவணத்தில் குறிப்பிட்ட தேதியில் தீர்மானம் இயற்றப்பட்டதாகவோ, அந்த தீர்மானத்தின் அடிப்படையில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாகவோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்படி வரைபடத்தில் பூங்காவிற்கு இடம் ஒதுக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அல்லது பூங்காவிற்கு இடம் ஒதுக்கப்படவில்லை என்றால், மனைப்பிரிவுகளின் மொத்த மதிப்பில் 10 சதவீதம் ஊராட்சி மன்றத்திற்கு பணமாக செலுத்த வேண்டும் என்றால் சரியல்ல. நான்

சொல்வது போல் 2011ம் ஆண்டு மனைப்பிரிவுகளுக்கு மேற்படி கட்டணம் செலுத்த வேண்டாம் என்றாலும், எப்போதும் மனைப்பிரிவுகளாக பூங்கா மற்றும் சாலை ஒதுக்கும் போது கட்டணம் செலுத்த வேண்டும் என்றால் சரியல்ல. ஆகையால் இந்த வரைபடம் முள்ளிப்பட்டு ஊராட்சி மன்றத்தால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அதன் அடிப்படையில் வழங்கப்படாத வரைபடம் என்றாலும், அது சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல.

9. நான் இந்த வரைபடம் முள்ளிப்பட்டு ஊராட்சி மன்றத்தால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அதன் அடிப்படையில் வழங்கப்பட்டதா என்பதை ஊராட்சி மன்றத்திற்கு சென்று பார்த்துள்ளேனா என்றால் இல்லை. நான் மேற்படி ஆவணம் ஊராட்சி மன்றத்தால் வழங்கப்பட்ட ஆவணம் என்பதை நிரூபணம் செய்வதற்காக ஊராட்சி மன்ற தலைவரையோ, செயலாளரையோ நீதிமன்றத்திற்கு வரவழைத்து விசாரணை செய்ய தயாராக உள்ளேனா என்றால் இல்லை. ஆகையால் மேற்படி பி.வா.சா.ஆ.22 இவ்வழக்கிற்காக தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. ராமலிங்கம் என்பவர் மனு செய்ததன் பேரில்தான் அனுமதி வழங்கப்பட்டது என்பதை நிரூபணம் செய்ய ராமலிங்கத்தை வரவழைத்து விசாரணை செய்ய தயாராக உள்ளேனா என்றால் இல்லை.

10. ஏற்கனவே இந்நீதிமன்றத்தில் ஆரணி மேற்கு வட்டார வளர்ச்சி அலுவலர் விசாரணை செய்து சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி மேற்கு வட்டார வளர்ச்சி அலுவலர் சாட்சியத்தில் மேற்படி 2 மனைகளுக்கும் அங்கீகாரம் வழங்கப்படவில்லை என்று சாட்சியம் அளித்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி 20 மனை பிரிவுகளின் மொத்த விஸ்தீரணம் 27 ஆயிரம் சதுர அடி என்று வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் இருக்கலாம். ஊராட்சி மன்ற தலைவருக்கு 2000 சதுர அடியில் மனைப்பிரிவுகள் அமைந்திருந்தால் மட்டுமே அதற்கு அங்கீகாரம் வழங்க முடியும், அதற்கு மேற்பட்டிருந்தால் அங்கீகாரம் வழங்க முடியாது என்றால் சரியல்ல, தலைவர் சொன்னால் போதும்.

11. 2000 சதுர அடிக்கு மேல் இருந்தால் கண்டிப்பாக DTCP அங்கீகாரம் கட்டாயம் வேண்டும் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. மேற்படி பி.வா.சா.ஆ.22 முழுக்க முழுக்க வழக்கிற்காக தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. மேற்படி பி.வா.சா.ஆ.22 முறையான ஆவணம் என்பதை நிரூபிக்க எனக்கு முழு பொறுப்பு உள்ளது ஆனால் நான் அதை நிரூபிக்க தவறி விட்டேன் என்றால் சரியல்ல. மேற்படி பி.வா.சா.ஆ.22 ஆவணத்தின் அடிப்படையில் நான் எந்த பரிகாரமும் கோர முடியாது என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது.**

**நேரம் - 1.50**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/-D.V.Koperundevi
District Munsif,
Arni